பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை



மாத இதழ்

மார்ச் 2014

இதழ்: 11

மலர் 14



# அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக

பிலி. 2:4



# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நமது தேவனின் பெரிதான கிருபையால் இந்த வருடத்தின் 3–ம் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறார். கடந்த மாதத்தில் சபையில் நடந்த ஆராதனைகள், சபையின் மூலம் நடைபெற்ற ஊழியங்கள் எல்லாவற்றையும் தேவன் ஆசீர்வதித்ததற்காகவும், தேவ பிரசன்னத்தை உணர செய்ததற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். நம்முடைய விண்ணப்பங்களுக்கு ஆண்டவர் பதில் கொடுத்து அநேக ஆசீர்வாதங்களை நமக்கு தந்ததற்காகவும், அநேகரை விடுதலை பண்ணியதற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

இந்த மாதம் நடக்கவிருக்கும் ஆராதனைகள், சபையின் ஊழியங்கள், விசேஷமாக "Ash Wednesday Service" –காக ஜெபித்துக் கொள்ளுங்கள். ஆண்டவராகிய இயேசு உபவாசமிருந்த நாட்களை திருச்சபை நினைவு கூர்ந்து உபவாச நாட்களை நிர்ணயிப்பது நல்லது. **"உங்களை கழுவி சுத்திகரியுங்கள்"** (ஏசா. 1:16). நாம் நமது குடும்ப வாழ்க்கை, வேலை அது மாத்திரமல்ல ஊழியம் என்று கூட ஓய்வில்லாமல் ஓடிக் கொண்டிருக்கலாம். ஆனால் தேவன் நாம் இன்றும் சுத்தமுள்ளவர்களாயிருக்க அனுதினமும் அழைக்கிறார். நாம் சடங்காச்சார உபவாசம் என்று இருக்காமல் நம்மை கழுவி சுத்திகரிக்கும்படி நம்மை தாழ்த்தும்படி இந்த உபவாச நாட்களை நிர்ணயிப்போம். வேதத்தில் பலவித உபவாசங்களை பார்க்க முடியும். மோசே இரண்டுமுறை 40 நாட்கள் புசியாமலும் குடியாமலும் இருந்ததை வேதத்தில் வாசிக்கலாம். தானியேல் மூன்று வாரங்கள் ருசிகரமான ஆகாரத்தை சாப்பிடாமல் தன்னை சிறுமைப் படுத்திக் கொண்டான் (தானி. 10:3). எஸ்தர் யூத ஜனங்கள் காக்கப்பட 3 நாட்கள் புசியாமலும் குடியாமலும் உபவாசம் பண்ணினாள் (எஸ். 4:16–17). நெகேமியா சில நாட்கள் துக்கித்து உபவாசித்தான் (நெகே. 1:4). இயேசுவும் 40 நாட்கள் உபவாசித்தார்.

உபவாசம் என்பது மற்றவர்களுக்கு நான் உபவாசம் இருக்கிறேன் என்று காண்பிப்பது அல்ல. அந்தரங்கத்திலிருக்கிற பிதாவை நோக்கி அல்லது அவருக்கு காணப்படும்படி (மத். 6:17) நம்மை தாழ்த்த வேண்டும். அப்பொழுது வெளியரங்கமாய் பலனளிப்பார். உங்களை கழுவி சுத்திகரியுங்கள் என்று ஆண்டவர் நம்மை அழைக்கிறார். உபவாசித்து ஜெபித்து ஆண்டவரிடமிருந்து உலக ஆசீர்வாதங்களை (வேலை, சம்பத்தியம், குழந்தை பாக்கியம், உயர்வு) பெற்றுக் கொள்ள நாம் துடிக்கலாம். இவைகளை எளிதாக தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அதை விட மேலான பரிசுத்த வாழ்க்கை நமக்கு முக்கியமானது. ஆண்டவராகிய இயேசுவின் வருகை சீக்கிரமாய் இருப்பதால் நாம் பரிசுத்த வாழ்க்கைக்கு முயற்சி செய்வோம். **"முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்: அப்பொழுது இவைகளெல்லாம் கூட கொடுக்கப்படும்"** (மத். 6:33).

**அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.** –எசே. 11:20

**"கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்"** (யோவே. 2:11). ஆதலால் இப்பொழுதே உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று ஆண்டவர் நம்மை அழைக்கிறார் (யோவே. 2:12). ஏனென்றால் நம் தேவன் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவர். உபவாசித்து, ஜெபித்து இழந்தவைகளை திரும்ப பெற்றுக் கொள்ளுவோம். இழந்த கிருபைகளை, வரங்களை, வல்லமைகளை பெற்று அவருக்காய் வாழ்வோம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**

## உதிர்ந்த முத்துக்கள்

"கடவுளின் எல்லா சேமிப்புக் கிடங்குகளும் நம்பிக்கையோடு கூடிய ஜெபத்தொனிக்கு திறந்தே இருக்கின்றன" – டி. எம். மெக் இன்டர்

"தனி ஜெபத்திற்கு நேரத்தை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைப்பதில் மிக சிறந்தவர்கள் தான் மிகவும் உயர்ந்த கிறிஸ்தவர்கள்" – தாமஸ் புரூக்ஸ்

"உங்களுடைய உணவுகள் உங்களுடைய சரீரத்திற்கு எப்படி ஊட்டமளிக்கின்றதோ, ஜெபமும் உங்கள் ஆன்மாவிற்கு ஊட்டமளிப்பதாக இருக்கவேண்டும்"
– ஃபாங்கோயில் ஃபெருலன்

"கடவுள் மனிதனிடம் பேசுவது ஒரு புனிதமான பொறுப்பு மிக்க கடினமான வேலையாகும். மனிதன் கடவுளிடம் பேசுவது குறைந்த பொறுப்புடையதல்ல, அதிக பக்கியுடையது"
– டாமர்ட் டாப்னி

"தாழ்ந்த நருங்குண்ட இருதயத்திற்கும் பரலோகத்தின் மாட்சிமைக்கும் இடையில் எந்த தடுப்புச் சுவர்களும் இல்லை. ஜெபம்தான் ஒரே சங்கேத மொழி" – எச் பல்லோ

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. ஆல்பிரட்**

## சபையின் 2014-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

# "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"

யோவான். **8:32**

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜாண் பீட்டர் – போன்: 50659288

நான் சொன்ன வார்த்தை நிறைவேறும் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் : –எசே. 12:28

# ஆயத்தம்

**தேவ செய்தி**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே! உபவாச நாட்களை ஆரம்பிக்கப் போகும் நம் ஒவ்வொருவரையும் கர்த்தர்தாமே பெலப்படுத்தி ஆன்மீக வாழ்வில் வளர்ச்சியடைய உதவி செய்வாராக. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை பார்த்து கூறினார், **"உங்களை பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்"** (யோசு. 3:5) என்று. அதுபோல தேவனோடு நெருங்கி உறவு கொள்ள, அவருடைய அற்புதங்களை காண, வாழ்வில் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள ஆயத்தம் மிக மிக அவசியமாகும். ஆண்டவரும் தனது ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாக தன்னை ஆயத்தப்படுத்துவதற்காக 40 நாட்கள் உபவாசம் இருந்ததை நாம் லெந்து நாட்கள் என நினைவு கூறுகிறோம்.

சாம்பல் புதன் என்று நாம் இந்த நாளை ஆரம்ப நாளாய் குறிப்பிடுகிறோம். இதன் பொருள் என்னவென்றால் சாம்பல் என்பது எரிந்து முடிந்து ஒன்றுமே இல்லை என்ற நிலைமையை குறிக்கிறது. அதுபோல நம் சரீரத்தில் காணப்படும் எல்லாவித அசுத்த குணங்களையும் எரித்து சாம்பலாக்கி கடவுளுக்கு முன்பாக நம்மை தாழ்த்துவதை இது குறிக்கிறது. அதுபோல நம் சீரத்தில் காணப்படும் எல்லாவித அசுத்த குணங்களையும் எரித்து சாம்பலாக்கி கடவுளுக்கு முன்பாக நம்மை தாழ்த்துவதை இது குறிக்கிறது: நம்முடைய சுயம் அழிகிறது. என்னால் ஒன்றும் இல்லை எல்லாமே ஆண்டவரே என்று அர்ப்பணிக்க வைக்கிறது. என்னுடைய வல்லமை, ஞானம், பெருமை, பெலன் என்று ஒன்றுமே இல்லை என வெளிப்படையாக ஒப்புக் கொள்ள வைக்கிறது. ஆண்டவரின் மகிமைக்கும் வழிநடத்துதலுக்கும் ஒப்புக் கொடுக்கிறது. நம்மை தாழ்த்துவது, வெறுத்துவிடுகிறது, பணிகிறது, நொறுங்கி விடுகிறது என அநேக அர்த்தங்கள் இதில் பொதிந்து கிடக்கிறது.

பிரியமானவர்களே! அப்பொழுதுதான் புதிய ஒரு விடியல் நம் வாழ்வில் ஆரம்பமாகிறது. புதிய வசந்தம் நம் வாழ்வில் தோன்றுகிறது. கடவுளின் துணையும், வல்லமையும் வெளிப்பட ஆரம்பிக்கிறது. சாட்சிகளாக இந்த சமுதாயத்தில் பெலமுள்ள வாழ்வு வாழ செயல்படுத்தவும், கள பணி செய்யவும் நம்மை தகுதிபடுத்துகிறது. இயேசு ஆண்டவரின் அழைப்புக்கு அர்ப்பணிப்போம். தேவ வல்லமையை பெற்றுக் கொள்வோம். கர்த்தர்தாமே துணை நின்று நம்மை நடத்துவார்.

**1. அநித்தியத்திலிருந்து நித்தியத்திற்கு:–** காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள்: காணப்படாதவைகளோ நித்தியமானவைகள் (1கொரி. 4:18). அழிந்து போகக்கூடிய திருப்தி செய்யாத இந்த உலகத்தை வெறுத்து உன்னத வாழ்வு தரும் ஆண்டவருக்காக வாழ ஒப்புக் கொடுப்பது லெந்து நாட்களில் நாம் செய்கின்ற பிரதான காரியமாகும். ஆண்டவர் இயேசுவும் இதைத்தான் செய்தார். பெற்றோருக்கு கீழ்ப்படிந்து ஒரு சாதாரண தச்சனாக வாழ்ந்தார். ஒருநாள் வந்தது கள பணி செய்வதற்காக: ஆத்தும அறுவடை செய்வதற்காக: நித்திய வாழ்வுக்காக தன் பணியை துவக்கினார். நாமும் துவங்குவோமா! மாயையான உலக வாழ்வின் மீது நமக்கிருக்கும் பற்றுகளை துறப்போம். ஆண்டவருக்காக வாழ ஆரம்பிப்போம். நான் உலகத்தானல்லாதது போல

நான் என் ஜனத்திலே உங்கள் கைகளுக்கு நீங்கலாக்கிவிடுவேன்: எசே. 13:23

அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம் (யோவா. 17:16). சத்தியத்தின் பாதையில் நடத்தும், நித்தியத்திற்கு நேராக வழிநடத்தும். சந்தோஷமாக உபவாசம் செய்து ஜெபம் செய்வோம். உள்ளான மனிதன் ஒவ்வொரு நாளும் வலிமையடைய தான தர்மங்களையும் செய்வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார் (மத். 6:16–18). தேவையானது ஒன்றே, மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டதுபோல (லூக். 10:42) ஆண்டவரையே நாம் பற்றிக் கொள்ளுவோமாக.

**2. பேச்சிலே அல்ல செயலிலே காண்பிக்க:–** "தேவனுடைய இராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது" (1கொரி. 4:20). நம் ஆண்டவரும் தன் வார்த்தையினால் மாத்திரமல்ல... செயலிலும் காண்பிக்கும்படியாக தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்தார். வெறும் மூன்றரை வருடங்கள்தான் ஊழியம் செய்தார். ஆனால் உலகத்தையே அவருடைய பணி தலைகீழாக புரட்டி போட்டுவிட்டது. நல்ல ஒரு கிறிஸ்தவனாக வாழ்ந்து காட்டுவதால் உண்டாகும் விளைவுதான் அது. நாமும் வாழ்ந்து காட்டுவோமா! நம்மை பார்க்கிறவர்கள் இவன் கிறிஸ்தவன் என புகழும்படியாக வாழ்வோம். ஆகவே லெந்து நாட்களில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பிரதான சத்தியம்... அன்னை தெரசா தன்னுடைய காப்பகங்களில் பராமரிக்கப்பட்ட குழந்தைகளுக்காக தெருக்களில் சென்று பிச்சைக்காரர்களைப் போல கையேந்தி உதவிகள் கேட்டார். ஒருநாள் ஒரு பணக்கார ஜமின்தார் அவர்கள் நீட்டிய கரத்தில் எச்சிலை துப்பினான். அவர்கள் புன்முறுவலோடு இதை எனக்கு ஏற்றுக் கொள்கிறேன். என் குழந்தைகளுக்கு ஒன்றும் கொடுக்கவில்லையே என்று சொல்லி தன்னுடைய மறு கையை நீட்டினார். அந்த ஜமின்தார் வெட்கமடைந்து பின் நாட்களில் அவர்களுக்கு ஆதரவு தரும் நபராக மாறினான். ஆண்டவருக்காக செயலில் வாஞ்சை காட்டுவது அதிக வலிமையுள்ளது. அது சமுதாயத்தையே புரட்டிப் போட வல்லமையுள்ளது. ஒரு சகோதரனாவது, சகோதரியாவது தேவைகளுக்கு உங்களிடம் வரும்போது தான தர்மங்களையும் உதவிகளையும் செய்யுங் (யாக். 2:15–17) கள் என்று. வெரும் வார்த்தைகளால் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக என்று மட்டும் சொல்லாதீர்கள். வார்த்தையாகிய கர்த்தர் வெறும் வார்த்தையாக மட்டும் இல்லாமல் மாம்ச உருவம் ஏற்று செயல்படுவதற்காக வந்தார். 40 நாட்கள் உபவாசம் இருந்து வாழ்வில் செய்து காண்பிக்க புறப்பட்டார். அல்லேலூயா! எத்தனை நல்ல ஆண்டவர் நமக்கு இருக்கிறார்! அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுவோமா! அவர் செய்தது போல கள பணி செய்ய அர்ப்பணிப்போமாக.

**3. தனக்காக அல்ல பிறருக்காக வாழ:–** அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக (பிலி. 2:4). கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது: வாங்குவதிலும் கொடுப்பதில்தான் மகிழ்ச்சி உண்டு. நான் சாக வேண்டும்: அதன் மூலம் பிறர் வாழ்வடைய வேண்டும் என்றுதான் சிலுவை நமக்கு சொல்லும் நற்செய்தி. வேதம் கூறுகிறது நீங்கள் உங்கள் வஸ்திரங்களை அல்ல உங்கள் இருதயங்களை கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள். அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர்.

அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவராயிருக்கிறார் (யோவே. 2:13). இரக்கம் உள்ள கர்த்தர் சிலுவையை சுமப்பதற்காக தன்னை அர்ப்பணித்தார். அவரே நம்முடைய வழிகாட்டி. பிறருக்காக வாழ தன்னை அர்ப்பணிப்பவன் முதலாவது பிறருக்காக ஜெபிக்க ஆரம்பிப்பான். எல்லா ஜெபக்கூடுகைகளிலும் கலந்து கொண்டு மற்றவர்களுக்காக மன்றாடி ஜெபிப்பான். அதன்பின் பிறருக்கு கொடுக்க ஆரம்பிப்பான். இவைகளெல்லாம் உள்ளவனே மாற்றத்தின் வெளிப்பாடுகள். கர்த்தர் தன் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் பிறருக்காக அர்ப்பணித்தார். நாமும் அவ்விதமாகவே பிறருடைய ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்க, கொடுக்க அர்ப்பணிப்போம். நம்மை சபிக்கிறவர்களை, துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதிப்போம். அவர்களுக்கு நன்மைகளை செய்வோம். இதுதான் இயேசுவின் வழி. அதையே நாமும் கடைபிடிப்போம்.

பிரியமானவர்களே! அர்த்தமுள்ள நாட்களாய் இந்த லெந்து நாட்கள் நமக்கு அமையட்டும். அநித்தியத்திற்காக அல்ல நித்தியத்திற்கும், பேச்சிலே அல்ல செயலிலும், தனக்காக அல்ல பிறருக்காகவும் வாழ நம்மை அர்ப்பணிப்போம். இப்படி செய்யும் போது தேவ பெலன் நம்மை நிரப்பும். வல்லமையாய் இந்த உலகத்தில் நம்மை வாழ வைக்கும். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்ற இயேசு கிறிஸ்து உங்களுக்கு துணை செய்து சத்தியத்தின் பாதையில் உங்களை தாங்கி நடத்துவார். ஆமென்.

**அன்பரின் பணியில்**
**சகோ. ஸ்டாலின்**

---

சீத்தாப் பழம்

## பழம் சாப்பிடுங்க

சீத்தாப்பழத்தில் வைட்டமின் சி கால்சியம் சத்து மிகுதியாக காணப்படுகிறது. நீர்ச்சத்து அதிகம் காணப்படுகிறது. இது தவிர மாச்சத்து, புரதம், கொழுப்பு, தாது உப்புகள், நார்ச்சத்து, பாஸ்பரஸ், இரும்புச்சத்து போன்றவை இப்பழத்தில் அதிகம் அடங்கியுள்ளது. சுவையும் அதிகம்: எல்லோரும் சாப்பிடலாம்.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

---

## CHILDREN THOSE WHO WROTE ANSWERS

Sharon Grace
Sharon Keerthana
Geona Shamy
Lydia
Joseph Prince
Raeshma
Jessly
Jainy
Roshan

அவர்கள் துரோகம்பண்ணினபடியினால்; நான் தேசத்தைப் பாழாய்ப்போகப்பண்ணுவேன்_எசே. 15:8

# அப்போஸ்தலர்களும் அவர்களின் மரணமும்

**1. அப். சீமோன் பேதுரு:–** ரோம் மாநகரில் சிலுவையில் அறையப்பட்டு கொலை செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுது, இயேசுவை போல் மரிக்க எனக்கு தகுதி இல்லை. ஆதலால் என்னை தலை கீழாக சிலுவையில் அறையுங்கள் என்று போர் சேவகரை வேண்டிக் கொண்டார். அப்படியே தலை கீழாக சிலுவையில் அறையப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார்.

**2. அப். மத்தேயு:–** எத்தியோப்பியாவில் சிறையாக்கப்பட்டு அங்கே தறையோடு சேர்த்து ஆணி அடித்தனர். அதன் பிறகு தலை வெட்டப்பட்டு இரத்த சாட்சியாய் மரித்தார்.

**3. அல்பேயுவின் குமாரன் அப். யாக்கோபு:–** தேவாலயத்திலிருந்து கீழே தூக்கி எறியப்பட்டு, பிறகு கற்களால் எறியுண்டு இரத்த சாட்சியாய் மரித்தார்.

**4. செபதேயுவின் குமாரன் அப். யாக்கோபு:–** பாலஸ்தீனாவில் ஏரோது அகிரிப்பா மன்னனால் ஏறக்குறைய கி.பி 44–வது ஆண்டு சிறைச்சேதம் பண்ணப்பட்டு இரத்த சாட்சியாய் மரித்தார்.

**5. அப். அந்திரேயா:–** அக்காயா என்னப்படும் கிரேக்க பட்டணத்தில் ஒலிவ மரத்தினால் செய்யப்பட்ட சிலுவையில் அறையப்பட்டு இரத்த சாட்சியாய் மரித்தார்.

**6. அப். பிலிப்பு:–** டோமிட்டியன் காலத்தில் ஹீரப்போலிஸ் என்ற பட்டணத்தில் பேதுருவை போல் தலை கீழாக சிலுவையில் அறையப்பட்டு இரத்த சாட்சியாய் மரித்தார்.

**7. அப். பற்தொலொமேயு:–** அர்மேனியாவில் உள்ள அல்லானும் என்னும் பட்டணத்தில் சவுக்கால் அடிக்கப்பட்டு, பிறகு தலை கீழாக சிலுவையில் அறையப்பட்டு இரத்த சாட்சியாய் மரித்தார்.

**8. அப். சீமோன்:–** இவரை குறித்ததான சரியான ஆதாரம் இன்னும் கிடைக்கவில்லை. இவரும் சிலுவையில் இரத்த சாட்சியாய் மரித்தார் என்று கருதுகின்றனர்.

**9. அப். தோமா:–** இந்தியாவிலுள்ள சென்னை பட்டணத்தில் ஈட்டியால் குத்தப்பட்டு இரத்த சாட்சியாய் மரித்தார்.

**10. அப். ததேயு:–** பெரிட்டஸ் என்ற இடத்தில் இரத்த சாட்சியாய் மரித்தார்.

**11. அப். மத்தியா:–** யூதாஸ்காரியோத்துக்கு பதிலாக தெரிந்து கொள்ளப்பட்ட (அப். 1:26) இவர் கற்களால் எறியுண்டு, பிறகு சிறைச் சேதம் பண்ணப்பட்டு இரத்த சாட்சியாய் மரித்தார்.

**12. அப். யோவான்:–** வயது முதிர்ந்து நல்லபடி மரித்த ஒரே அப்போஸ்தலர் இவர் ஒருவரே என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

**13. குறிப்பு:–** இயேசு கிறிஸ்துவை காட்டிக் கொடுத்ததான யூதாஸ்காரியோத்து நான்று கொண்டு தலைகீழாக விழுந்து வயிறு வெடித்து செத்தான் (மத். 27:5).

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. தாமஸ்**

நான் என் உக்கிரத்தை உன்னில் ஆறப்பண்ணி; இனி கோபமாயிராமல் அமருவேன். _எசே.16:42

# தீமைக்கு மேன்மை

**"நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே: தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே: கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும். ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்"** (ரோம. 8:17–18). ஒரு கிறிஸ்தவ விளையாட்டு வீரர் சிறுவயது முதல் நல்ல பயிற்சி எடுத்துவந்தார். நன்கு பயிற்சி பெற்றிருந்த அவருக்கு போட்டி நடக்கவிருக்கும் ஒரு வாரத்திற்கு முன்பு அவர் சென்ற கார் விபத்தில் சிக்கி கால் எலும்பு முறிந்ததால் போட்டியில் கலந்து கொள்ள முடியாமல் போனது. மிகுந்த பயிற்சிக்குப்பின் இப்படி ஆகிவிட்டதே என்று மிகவும் வேதனைப்பட்டார். ஆனால் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றோர் ஆனந்த கொண்டாட்டத்தில் அவர்களை அறியாமல் அவர்கள் குடித்திருந்த பானத்தில் போட்டியாளர்கள் எடுக்கக்கூடாத மருந்து சேர்க்கப்பட்டு, அவர்களை பரிசோதித்தபோது வீரர்களின் உடலில் மருந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் வெற்றி பெற்றோர் வெட்கமும் வேதனையும் அடைந்தனர். இப்போதுதான் கிறிஸ்தவ விளையாட்டு வீரர் தேவன் தனக்கு ஏன் அந்த விபத்தை அனுமதித்தார் என்று உணர்ந்து கொண்டார்.

நீங்களும் நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்று: ஏமாற்றமும் தோல்வியும் என்று எண்ணுகிறீர்களோ! கலங்க வேண்டாம். வேதத்தில் அநேகருக்கு இப்படி நடந்திருக்கிறது. யோசேப்பு தன் பரிசுத்தத்தைக் காக்க வைராக்கியமாய் நின்றது அவனை சிறையில் சேர்க்குமென்று நினைக்கவில்லை. ஆனால் முடிவோ எகிப்து தேசம் முழுவதற்கும் இரண்டாவதாக ஆளுகை செய்யும் அதிகாரம் பெற்றவனாக தேவன் மாற்றினார். தானியேல் மூன்று வேளையும் ஜெபித்ததால் சிங்க கெபியில் போடப்பட்டான். முடிவோ புறஜாதியான ராஜா தேவனை பணிந்து கொள்ளும்படி மாற்றியது. யோனா கடலில் வீசப்பட்டு மூன்று நாள் மீனின் வயிற்றில் இருக்க நேர்ந்த போதும், உயிருடன் மீண்டு கர்த்தருடைய வார்த்தையை மீண்டும் அறிவிப்போம் என நினைக்கவில்லை. முடிவோ அவனுடைய பிரசங்கத்தில் ஒரு நகரமே விசுவாசத்திற்குள் வந்தது. பேதுரு தன் தொழிலைவிட்டு இயேசுவை பின்பற்றியபோது நினைக்கவில்லை, தன்னுடைய பிரசங்கத்தால் 3000 பேர், 5000 பேர் இரட்சிக்கப்படுவார்கள் என்று. இப்படி அநேக உதாரணங்களை வேதத்தில் பார்க்கமுடியும். அவர்கள் நினைத்தது ஒன்று, ஆனால் நடந்ததோ பெரிய காரியங்கள். அவர்கள் நினைத்தது தாங்கள் அவ்வளவுதான் இனி நன்மையான காரியங்கள் தங்களுக்கு நடக்காது என்று. ஆனால் தீமையானவற்றை தேவன் நன்மையாக மாற்றினார்.

**"அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்"** (ரோம. 8:28) என்று வேத வசனம் நம்மை தேற்றுகிறது. நமக்கு நடக்கிற காரியங்கள் யாவும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறது என்ற விசுவாசம் நம்முடைய உள்ளத்தில் பெருகட்டும். தேவன் நம்முடைய இருளான பாடுள்ள சூழ் நிலைகளை மாற்றி, நமக்கு நன்மையாக செய்து முடிப்பார்: அவற்றை மகிமையாக மாற்றி தருவார். ஆமென்: அல்லேலூயா!

**கர்த்தரின் கிருபையில்**

Sis. **ஹேனா எசேக்கியல்**

அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான். –எசே. 18:24



# பதில் சொல்லுங்க

( தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும் )

1. பாம்பாட்டிகள் விநோதமாய் ஊதினாலும் ஊதும் சத்தத்துக்கு செவிகொடாதபடி தன்காதை அடைப்பது எது?
2. திரளான தண்ணீர்களின் இரைச்சலைப் பார்க்கிலும் சமுத்திரத்தின் வலுமையான அலைகளைப் பார்க்கிலும் கர்த்தர் எப்படிப்பட்டவர்?
3. சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறது எது?
4. தேவ பர்வதம் எதைப் போலிருக்கிறது?
5. எது சமீபமாய் இருக்கிறதென்று தேவனின் அதிசயமான கிரியைகள் அறிவிக்கிறது?
6. எவை தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரம்?
7. கபடு செய்யும் நாவு எதைப்போன்றது?
8. கர்த்தருடைய இரகசியம் யாரிடத்தில் இருக்கிறது?
9. கல்மழையால் எகிப்தியரின் எதை அழித்தார்?
10. துதி செய்வது யாருக்குத் தகும்?
11. சத்தியம் எங்கிருந்து முளைக்கும்?
12. நீதியால் நிறைந்திருப்பது எது?
13. எங்கே தேவன் அறியப்பட்டவர்?
14. கர்த்தர் மேல் எதை வைக்க வேண்டும்?
15. எது விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி?

குறிப்பு:- வேதாகமத்தில் சங்கீதம் 1 முதல் 100 வரையுள்ள அதிகாரத்தில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 21-03-2014 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.



## பெப்ரவரி மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. பிரியா பிரேம்குமார்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. சுகந்தி தம்புகுமார்
Sis. சாந்தி
Sis. ஜீனா சதீஸ்குமார்
Sis. சுபா ஸ்டீபன்
Sis. ஹெப்சி சாம்
Sis. பத்மினி வர்க்கீஸ்
Sis. ஜரின் டென்சிங்
Sis.ஜரின் சில்வியா ஆல்பர்ட்
Bro. ஜாண்சன்
Bro. லூர்து சாமி
Bro. ரவிந்தர்
Bro. ஜாண்
Bro. அருள்மணி
Sis. ஜோான் அசோக்குமார்
Sis. ஹேனா எசேக்கியேல்
Sis. மரகதம் ஸ்டீபன்
Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம்
Sis. செலின் டேவிட்
Sis. விக்டோரியா ராஜன்
Sis. கீதா ஜெயக்குமார்
Sis. டாஃப்னி ஜெபசிங்
Sis. மெர்லின் ஜோன்ஸ்
Sis. அனிதா தாஸ்
Bro. லாசர்
Bro. இம்மானுவேல்
Bro. ஆல்பர்ட்
Bro. தர்மர்

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. ஜாண்சி ராணி ராஜவேல்
- செல்வி. திவ்யா அருள்மணி
- செல்வி. ஜெசிந்தா தர்மசகாயம்
- செல்வி. நிகிற்றா அருண் இம்மானுவேல்
- செல்வி. ஷேர்லி ஸ்ரீனிவாசன்
- செல்வி. ஸ்டெஃபானா சதீஸ்குமார்
- செல்வி. ஜெஸ்வின் ஆ. யேசுதாஸ்
- செல்வி. அபியா செல்வி தர்மர்
- செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்
- செல்வன். காலேப் சாலொமோன்
- செல்வன். ஜோஷ்வா பால் பாண்டியராஜ்
- செல்வன். ரையன் சாமுவேல் ஜாண்சன்
- செல்வன். ஜாண்ராஜ் ராஜவேல்
- செல்வன். ஜெகு சாமுவேல் செல்வசிங்
- செல்வன். அட்ரியல் கேமுவேல் தாஸ்
- செல்வன். சிசில் செல்வதாஸ்
- சகோதரி. வித்யா வில்சன்
- சகோதரி. சுதா மனோகரன்
- சகோதரி. சிஜோ ஸ்ரீதர்
- சகோதரி. ஆஸ்லி முத்தையா
- சகோதரி. கீதா ஜெயக்குமார்
- சகோ. அருள்மணி
- சகோ. தர்மசகாயம்
- சகோ. சுனில் சுந்தர்ராஜ்
- சகோ. ஜெயக்குமார்
- சகோ. சாமுவேல்
- சகோ. ஜாண் மில்லர்
- சகோ. விசு
- சகோ. ஜாண்போஸ்கோ
- சகோ. அசோக்ராஜ்
- சகோ. யேசுரெத்தினம்
- சகோ. முத்தையா
- சகோ. ராஜா ரவிச்சந்திரன்
- சகோ. லாசர் ராஜமணி
- சகோ. பால் டேனியேல்



# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. ஆசீர்வாதம்
- திருமதி & திரு. லாசர் ராஜமணி
- திருமதி & திரு. சுகுமார்
- திருமதி & திரு. சத்தியநாதன்



நான் உங்கள் பட்சத்திலிருந்து; உங்களைக் கண்ணோக்குவேன்: நீங்கள் பண்படுத்தப்பட்டு விதைக்கப்படுவீர்கள். -எசே. 36:9

# மார்ச் 2014 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 02-03-2014 | சகோ. அற்புதராஜ் | சகோ. ஜெயசேகர் |
| 09-03-2014 | Rev. E.D ராஜாசிங் எலியாஸ் ~ (Bangalore) | |
| 16-03-2014 | சகோ.ஸ்டாலின் | சகோ. சுகுமார் |
| 23-03-2014 | சகோ.ஜஸ்டின்சுந்தரராஜ் | சகோ. ஜெகநாதன் |
| 30-03-2014 | Pr. பீற்றர் ~ (சென்னை) | |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 07-03-2014 | சகோ. ஐசக்துரை | சகோ. பிரேம்குமார் |
| 14-03-2014 | Rev. E.D ராஜாசிங் எலியாஸ் ~ (Bangalore) | |
| 21-03-2014 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28-03-2014 | குடும்ப ஆராதனை | |

சாம்பல் புதன்: 05-03-2014 மாலை 6:30 மணி முதல் 8.00 வரை
இடம்: Marthoma Basement Prayer Hall - Mangaf

சங்கிலி தொடர் ஜெபம்: 06-03-2014 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

முழு இரவு ஜெபம்: 13-03-2014 இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை
செய்தி :- Rev. E.D ராஜாசிங் எலியாஸ் ~ (Bangalore)

வாலிபர் கூடுகை: இடம், நேரம், தேதி பின்பு அறிவிக்கப்படும்

பெண்கள் கூடுகை: 19-03-2014, Sis. தயா யேசுரெத்தினம் இல்லம், ஃபாஹாகீல்

நீங்கள் உயிரடைவீர்கள்: நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்:-எசே. 37:14

# QUIZ FOR CHILDREN

(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1 Who has joined a man and his wife?
2. What does ‘Ephphatha’ mean?
3. What was the tradition followed by Pharisees?
4. Jesus departed to the mountain to ________ (Hint: It is tradition of Jesus)
5. How can this kind of evil spirit (deaf & dumb) come out?
6. How many evil things come from within and defile a man?
7. Name the place where their worm does not die and the fire is not quenched.
8. Name the three steps told by Jesus for whoever desires to come after Him.
9. If anyone desires to be first, he shall be _______ of all, ________ of all and ________ of all.
10. What are the three parts of the body Jesus tells to be cut rather than entering into hell with them?
11. Memorize and tell Sunday School teachers: Mk 8:35, Mk 9:41, Mk 10:45

**Note:- ANSWERS can be taken from Mark 6 to 10. Submit your answers to the Sunday School Teachers on or before 21.03.2014.**

# ANSWER FOR THE QUIZ (FEBRUARY)

1. Whoever does the will of God Mk 3:35
2. Repentance Mk 1:4
3. Hardness of Pharisees’ heart Mk 3:5
4. Who blasphemes against Holy Spirit (Mk 3:29), Scribes (Mk 3:22) They said, “jesus has an unclean spirit” (Mk 3:30)
5. 6 parables; Cloth (Mk 2:21), Wineskin (Mk 2:22), Seeds (Mk 4:3-8), Lamp (Mk 4:21-22), Growing seed (Mk 4:26-29), Mustard seed (Mk 4:31-32)
6. 4; Mk 3:14, 4:10, 5:25, 5:42
7. Word (Mk 4:14), Satan (Mk 4:15), Tribulation (Mk 4:17), Cares of this world, deceitfulness of riches & desires for other things (Mk 4:19), Good ground (Mk 4:20)
8. 9 miracles; Unclean spirit (Mk 1:26), Peter’s mother-in-law (1:31), Leper (1:42), Paralytic (2:12), Withered hand (3:5), Windstorm (4:39), Demons (5:13), Woman with flow of blood (5:29), Jairus’s daughter (5:42)
9. To pray; Solitary place (Mk 1:35)
10. Healed on Sabbath day (Mk 3:5)

நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்: -தானி. 1:17



## பெப்ரவரி மாதக் கேள்விகளுக்கு பதில்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிலந்திப்பூச்சி | யோபு. 8:14. |
| 2. | தேவனுடைய கரம் | யோபு. 26:13 |
| 3. | என் உள்ளிந்திரியங்கள் | யோபு. 19:27 |
| 4. | ஜீவன் | யோபு. 10:1 |
| 5. | அம்பு | யோபு. 41:28 |
| 6. | மரணம் | யோபு. 30:23 |
| 7. | என் நாட்கள் அஞ்சற்காரர் | யோபு. 9:25 |
| 8. | ஆக்கினை | யோபு. 31:3 |
| 9. | எருது | யோபு. 6:5 |
| 10. | பரிதானம் வாங்கினவர்களின் கூடாரங்களை | யோபு. 15:34 |
| 11. | மழைக்கு திட்டத்தையும், மின்னலுக்கு வழியையும் | யோபு. 28:26 |
| 12. | மரண இருள் | யோபு. 16:16 |
| 13. | கோபாக்கினையின் | யோபு. 21:30 |
| 14. | அவன் வாசஸ்தலத்தின் மேல் | யோபு. 18:15 |
| 15. | வருத்தம் | யோபு. 5:6 |

## மாறாதவர்




மாறுகின்ற மனிதரின் வஞ்சக வார்த்தை கண்டு
மறுகியே நான் தவிக்கையில் பாசகரம் கொண்டு
மாறாத நேசர் இயேசு பாசமாய் அணைத்து கொண்டு
மருளாதே என்றுரைத்து தேற்றியே நிறுத்தினாரே!

நம்பினவன் கைவிட்டு பரிகாசம் செய்த போதும்
நானிருக்க பயமேன் என பொழ்மொழி பகன்றவரெல்லாம்
நடுவழியில் விட்டு சென்று வஞ்சகமாய் சிரிக்கையிலே
நல்வார்த்தை சொல்லி இயேசு அன்றாடம் தேற்றினாரே!

துரோகங்கள் பல இழைத்து தூயவர்போல் நடிப்பவரெல்லாம்
தூசியாக போகும் காலம் துரிதமாக வந்திடுது
தூயன் இயேசு துயர்துடைக்க வைராக்கியம் பூண்டுவிட்டார்
தூயவர்கள் வாழ்வடைய துணை செய்ய வந்துவிட்டார்!

மண்குதிரை மனிதனை நம்பி ஆற்றிலே இறங்கிடாதே
மண்ணாக கரைந்திடுவான் நட்டாற்றில் விட்டிடுவான்
மாறாத மகிபன் இயேசு என்றென்றும் உதவிடுவார்
மாறாத விசுவாசம் குறையாமல் காத்திடுவார்.

– ஸ்டாலின்

## கருப்பட்டி

குவைத் பாட்டி



**உணவுக்குப்பின் தண்ணீரில் சிறிது கருப்பட்டியை கரைத்து குடிக்கவும். இதனால் வயிற்றில் அமிலம் சுரப்பது குறையும்.**

ராஜா தானியேலை நோக்கி: நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியினால்; உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும்; ராஜாக்களுக்கு ஆண்டவரும்; மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார் என்றான். -தானி. 2:47

மறக்கமுடியுமா!

# மாம(பு)னிதர் கார்ல் பேக்கர்
# (1804 – 1877)

குடும்பப் பொறுப்பைச் சுமக்கவேண்டிய ஒருவருக்கு மிஷனெரிப்பணிக்கு அழைப்பு உண்டா? அவரும் தேவனுக்கு உயர்ந்ததொரு பணி செய்யமுடியுமா? இக்கேள்விகளுக்கு பதிலாக அமைவதுதான் கார்ல் பேக்கர் அவர்களின் வாழ்க்கை வரலாறு. பள்ளிப் படிப்பை முடித்துப் பல வருடங்கள் ஆனபின்பும் தனது மேற்படிப்பினை தொடர முடியாத நிலையிலுள்ள ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் கார்ல் பேக்கர். தனது விதவைத் தாயையும் திருமணமாகாத சகோதரியையும் காப்பாற்ற வேண்டி, பட்டறை ஒன்றில் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமான நிலையிலிருந்தார் அவர். அந்த ஊதியத்தில் சிறுகச் சிறுக சேர்த்த 100 டாலரை தனது மருத்துவப் படிப்பிற்காக முன் பணமாகக் கொண்டு கல்லூரியில் சேர்ந்தார். அப்போது **"நீர் எனக்கு நல்ல படிப்பை தந்தால் என் வாழ்வை உமக்கு அர்ப்பணித்து உமக்கு ஊழியம் செய்வேன்"** என தேவனுடன் உடன்படிக்கை செய்தார்.

1916–ம் ஆண்டு 22–வது வயதில் பிலடெல்பியா மருத்துவக் கல்லூரியில் தனது மருத்துவப் படிப்பை படித்துக் கொண்டிருந்தார். அப்போது முதலாம் உலகப் போர் ஆரம்பித்ததால் போரில் காயப்பட்டவர்களுக்கு இலவசமாகத் தங்கும் அறையும் உணவும் ஊக்கத்தொகையும் வழங்கினார்கள். இதனால் எளிதாக தனது மருத்துவப் படிப்பை முடித்தார். கார்ல் பேக்கர் 1922–ல் மரியா என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். திருமணத்தின்போது மரியாவிடம் தான் தேவனிடம் செய்த உடன்படிக்கையையும் தனது வாழ்வில் முதன்மையானவர் கிறிஸ்து மட்டுமே என்பதையும் தெளிவு படுத்தினார். அதற்கு மரியாவும் சம்மதித்திருந்தார். திருமணத்திற்குப்பின் அமெரிக்காவில் பயர் பட்டணத்தில் மருத்துவராகப் பணிபுரிந்து வந்தார். அவரது திறமையான சிகிட்சையால் அவருக்குப் பெயரும் புகழும் கிடைத்தது. தேவனுடன் அவர் செய்திருந்த உடன்படிக்கையை சார்லஸ் ஹார்ல்பேர்ட் என்ற மிஷனெரியிடமிருந்து வந்த ஒரு கடிதம் அவருக்கு மீண்டும் நினைவுபடுத்தியது. ஆப்பிரிக்காவிலுள்ள காஸ்கோ என்ற பகுதியில் ஊழியம் செய்த தனது மருமகள் எலிசபெத் மோர்ஸ் ஹார்ல்பேர்ட் என்ற மருத்துவ மிஷனெரி திடீரென்று இறந்து போனதால் அந்த பகுதியில் பணிபுரிய ஒரு மருத்துவர் தேவை என்று அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். தேவனுக்குச் செய்த அர்ப்பணிப்பு பேக்கரை அதிகம் உந்தி தள்ளியது. என்றாலும் கடைசிநாட்களில் தனது தாயைக் காப்பாற்ற வேண்டிய கடமை உணர்வு அவரை அழைப்புக்குக் கீழ்ப்படிய இயலாமல் தடுத்தது. எனவே தன்னால் ஆப்பிரிக்காவிற்கு வர இயலாது என கடிதம் எழுதினார் பேக்கர். ஆனால் சார்லஸ் ஹார்ல்பேர்ட் சோர்ந்து போகாமல் தொடர்ந்து கடிதம் எழுதி அவரை ஊக்குவிக்கவே 1928–ம் ஆண்டு தனது நல்ல வருமானம், புகழ் தந்த வேலையை விட்டுவிட்டு ஆப்பிரிக்கா காடுகளில் பணி செய்ய பயணமானார்.

ஆப்பிரிக்காவில் காட்வா என்ற இடத்தில் முதலில் தங்கி பணிசெய்ய ஆரம்பித்தார். அங்கு மண் குடிசையில் வாழவேண்டியதிருந்தது. அவரது மனைவி மேரியோ அதை அலங்கரித்து மாளிகையாக மாற்றினார். ஆறு வருடம் அங்கு பணி செய்தபின் 1934–ம் ஆண்டு ஓசா என்ற இடத்தில் ஒரு சிறிய மருத்துவமனை நிறுவி

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்.. –தானி. 3:17

இட்டுரி காட்டு மக்களுக்கு மருத்துவ உதவி செய்ய ஆரம்பித்தனர். அனுதினமும் 200–க்கும் மேற்பட்ட மக்கள் தூரமான இடத்திலிருந்து இவரது மருத்துவமனைக்கு வந்து உடல் ஆரோக்கியம் பெற்றனர். சரீர சுகம் தேடிவரும் மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்காமல் இவர் அனுப்பியதே இல்லை. இவரது மருத்துவப் பணியின் மூலம் தீய ஆவிகள் மற்றும் மந்திரவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கிராம மக்களையும் எளிதாக சுவிசேஷத்திற்கு செவிசாய்க்க வைக்க முடிந்தது. மருத்துவப் பணியில் முழு மூச்சுடன் ஈடுபட்டாலும் ஒவ்வொரு வார இறுதியிலும் சனி. ஞாயிறு முழுவதும் சுவிசேஷ பணிக்காக மட்டுமே ஒதுக்கி வைத்து பணிபுரிந்தார் அவர். சுவிசேஷத்தை சரியான முறையில் மக்களுக்கு எடுத்து சொல்பவரில் பேக்கர் தலை சிறந்தவர். வேத கதைகளை ஆப்பிரிக்கா சூழ்நிலைக்கு ஏற்ப விளக்கக்கூடிய படங்கள் நிறைந்த ஒரு புத்தகத்தை அவரே உருவாக்கினார். அதை உபயோகித்து நாம் மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை எளிதாக பிரசங்கிக்க முடியும். இதனை ஆப்பிரிக்க விசுவாசிகளுக்கு இவர் கற்றுக்கொடுத்து சுவிசேக்ஷத்தை அறிவிக்க அவர்களை ஊக்கப்படுத்தினார்.

தனது மருத்துவப் பணியைக் குறித்து இவ்வாறு எழுதுகிறார். இயேசு கிறிஸ்துவுக்கு யோவான் ஸ்நானன் எப்படி முன்னோடியாக இருந்து வழியை ஆயத்தம் பண்ணினாரோ அப்படியே எனது மருத்துவ பணியும் இம்மக்களுக்கு நற்செய்தியை நான் சொல்லவும், அவர்கள் அதை கவனமுடன் கேட்கவும் ஆயத்தம் செய்கிறது என்று குறிப்பிட்டார். தினமும் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு சுவிசேஷம் சொல்லுவது மட்டுமல்லாமல் தன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளை முறையாக ஆவிக்குரிய வாழ்வில் வளர்க்கவும் அவர்கள் குணமடைந்தபின் தாங்கள் வாழும் இடத்தில் திருச்சபையில் இணைந்து ஆண்டவரை ஆராதிக்க செய்யவேண்டிய பொறுப்பு தனக்கு உண்டு என்பதை அறிந்து செயல்பட்டார்.

இட்டுர் காடுகளிலுள்ள தொழுநோயாளிகள் கார்ல் பேக்கரின் மருத்துவ பணியை அறிந்து சிகிட்சைக்காக வர ஆரம்பித்தனர். இவர்கள் வாழ்ந்து ஒரு பயனும் இல்லை என்று சமுதாயத்தில் வெறுத்து ஒதுக்கப்பட்டட தொழுநோயளிகளுக்கு கார்ல் பேக்கரின் அன்பும் அரவணைப்பும் உற்சாகத்தையும் வாழ்க்கைக்கு புது அர்த்தத்தையும் தந்தது. எனவே அவர்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விசுவாசத்துக்குள் வந்தனர். நாளுக்கு நாள் எண்ணிக்கை பெருகவே 1100 ஏக்கர் நிலத்தில் தொழுநோயாளிகளுக்கான கிராமம் ஒன்றை ஏற்படுத்தி அதில் 4000 தொழுநோயாளிகளை தங்க வைத்து மருத்துவ உதவி செய்து வந்தார். கார்ல் பேக்கர் ஒவ்வொரு ஆண்டும் 4000 அறுவை சிகிட்சைகளை 500 பிரசவங்களை தனது ஒச்சா மருத்துவமனையில் செய்தார் என்றால் அவர் எவ்வளவு கடினமாக ஒவ்வொருநாளும் உழைத்தர் என்பதை தெரிந்துகொள்ளலாம்.

மனநோயாளிகளை பிசாசு பிடித்தவர்கள் என்று ஆப்பிரிக்கர்கள் நம்பியதால் குடும்பத்தாராலும் சமுதாயத்தினராலும் ஒதுக்கப்பட்டனர். தனது மருத்துவ மனையில்தனி பகுதி ஒன்றை ஆரம்பித்து மனநோயாளிகளுக்கு சிகிட்சை செய்தார். ஆப்பிரிக்காவில் இவரது மருத்துவமனையே மனநோயாளிகளுக்காக திறக்கப்பட்ட முதல் மருத்துவமனையாகும். 1950–ம் ஆண்டு தேச விடுதலைக்காக ஏற்பட்ட புரட்சியின்போது சிம்பாஸ் கொரில்லாக்கள் இவரது மிஷன், வீடு, மருத்துவமனை

ஆகியவற்றை நாசப்படுத்தினர். பாதுகாப்பிற்காக சிலகாலம் கிழக்கு ஆப்பிரிக்கா நோக்கி இடம் பெயர்ந்த இவர் 70 வயதானதால் ஓய்வெடுத்துக் கொள்ளும்படி இயக்கம் வற்புறுத்தியபோதும் அதற்கு மறுத்து ஆப்பிரிக்கா எனது தாய்வீடு என்றும் அமெரிக்கா தேசத்திற்கு திரும்பிப்போக தான் விரும்பவில்லை என்றும் தெளிவாக சொன்னார். புரட்சி ஓய்ந்து சற்று அமைதி திரும்பியதும் ஒச்சா திரும்பினார். 1966–ம் ஆண்டு 3 முறை பேக்கர் மாரடைப்பினால் தாக்கப்பட்டாலும் ஓய்ந்திருக்க மறுத்து சுறுசுறுப்புடன் பணிபுரிந்தார். இன்று என் வாழ்வின் கடைசி நாளாக இருக்குமானால் அதனை படுக்கையில் நான் செலவழிக்க விரும்பவில்லை என்று அடிக்கடி கூறுவார். தனது 83 வயது வரை காஸ்கோ பகுதியிலே பணிபுரிந்த அவர் பின்பு அமெரிக்கா திரும்பி மருத்துவ சுவிசேஷ மையம் என்ற அமைப்பை ஏற்படுத்தி ஆப்பிரிக்கா நாட்டிற்கு ஊழியத்திற்கு செல்லும் மருத்துவர்களை பயிற்றுவிக்கும் பணியை செய்தார். 60 வருடம் மருத்துவ மிஷனெரியாக ஆப்பிரிக்காவில் பணிபுரிந்த இவரை குறித்து ஒரு காஸ்கோ மனிதன் இவ்வாறு கூறினான். பல மிஷனெரிகள் இயேசு கிறிஸ்துவை குறித்து எங்களுக்கு பிரசங்கித்தனர். ஆனால் கார்ல் பேக்கரோ இயேசு கிறிஸ்துவை போலவே எங்களுக்கு வாழ்ந்து காட்டினார் என்றார். தேவையுள்ள இந்த தேசத்தில் உங்கள் கல்வியை. தாலந்தை தேவப்பணிக்கு மூலதனமாக்கி தேவனுக்கு அநேகரை சிநேகிதராக்கும் தேவப்பணியை நிறைவேற்ற நாம் ஏன் முன்வரக்கூடாது!

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

## இன்றைய தகவல்

## பைசா கோபுரம்

உலகின் அதிசயம் என கூறப்படும் இத்தாலியில் உள்ள பைசா கோபுரம் மூன்று கட்டமாக 177–ம் வருடங்களில் கட்டப்பட்டது. இந்த கட்டடத்தை முதலில் கட்டும் போது இதன் கீழ் உள்ள மண்ணை சோதிக்காமல், ஒரு கட்டடம் கட்டுவதற்கான அடிப்படை விசயங்களைக்கூட கடைபிடிக்காமல் கட்டடத்தின் அடித்தளத்தை மிகவும் மோசமாக கட்டினர்கள். இதனால் இந்த கட்டடம் சாயத் தொடங்கியது. இரண்டாம் தளம் கட்டும் போது போர் மூண்டதால் இதன் கட்டுமானம் சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் தொடங்கியதும், ஓரளவிற்கு இதன் அடித்தள மண் இதற்கு ஒத்துழைத்தது. இதனால் மூன்றாவது தளத்தை அமைக்க முடிந்தது. ஒரு கேவலமான கட்டுமானத்திற்கு எடுத்துக்காட்டான ஒரு கட்டடம் உலக அதிசயப் பட்டியலில் இன்றும் உள்ளது! நம் புருவங்களை விரித்து வியக்கச் செய்கிறதல்லவா!

**– அஹமதி தமிழ் திருச்சபை**

## போ அல்லது அனுப்பு

**நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.**

சகோ. சிவகுமார் – போன்: 97224276

பெல்ஷாத்சார் தானியேலுக்கு இரத்தாம்பரத்தையும்; அவனுடைய கழுத்தில் பொற்சரப்பணியையும் தரிப்பிக்கவும்; ராஜ்யத்திலே அவன் மூன்றாம் அதிகாரியாயிருப்பவன் என்று அவனைக்குறித்து கட்டளையிட்டான். -தானி. 5:29

# பயம் தேவையா?



**"உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்: உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்"** (சங். 128:2). உங்களில் அநேகருக்கு இந்த வசனம் வாக்குத்தத்தமாக வந்திருக்கலாம். கர்த்தர் இந்த ஆசீர்வாதத்தை நமக்கு எப்போது கொடுப்பார்? கர்த்தருக்குப்பயந்து, அவர் வழிகளில் நடக்கும் போது (சங். 128:1). வேதத்தில் 2 விதமான பயங்களைக் குறித்துப்பார்க்கிறோம். தேவையற்ற பயம் – இது கவலையை, குழப்பத்தை, இறுதியில் வியாதியைக் கொடுக்கும். ஆதாம் பாவம் செய்ததினால், பயந்து தன்னை ஒளித்துக்கொண்டான் (ஆதி. 3:10) பாவம் மனிதனை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது. தேவையற்ற பயத்தை அவனுக்குக் கொடுக்கிறது. தேவன் சீனாய் மலையில் எழுந்தருளின போது, ஜனங்கள் பயந்தார்கள். அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்: உங்களைச் சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவம் செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், தேவன் எழுந்தருளினார் (யாத். 20:20) என்றான். இங்கே, இரண்டு விதமான பயங்களைக் குறித்து ஒரே வசனத்தில் பார்க்கிறோம்.

இயேசு சொன்னார்: ஆத்துமாவைக்கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். **"ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்"** (மத். 10:28). தேவையுள்ள பயம் – அது கர்த்தருக்குப் பயப்படுகிற பயம். பாவம் செய்யாதபடிக்கு நம்மைக்காத்துக் கொள்ளும் பயம். கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பம் (நீதி. 1:7). கர்த்தருக்குப் பயப்படும் மனுஷன் முதியோரைக் கனம் பண்ணுவான் (லேவி. 19:32), பிறனுக்கு அநியாயம் செய்யமாட்டான் (லேவி. 25:17) ஜனங்களுக்கு தருமங்களை செய்வான், எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருப்பான் (அப். 10:2). கர்த்தருக்குப் பயப்படுகிறவன் அவர் வழிகளில் நடப்பான்(சங். 128:1), அவன் வெறும் வாய்ச்சொல் வீரன் அல்ல (Not Just Heart & talk). Heart & Walk என அவர் வழியில் நடந்து காட்டுபவன். அவன் இருதயமும், நடையும் தேவனோடு ஒத்து இருக்கும்.

**ஆ–1:** தேவனுக்குப் பயந்து நடக்கும் போது, எத்தனை விதமான ஆசீர்வாதங்கள் பாருங்கள். முதலாவது, தேவன் அந்த மனிதனை ஆசீர்வதிக்கிறார். அவன் கைகளின் பிரயாசம் (பலன்) வீணாய்ப் போகாது. அதை அவன் சாப்பிடுவான் (சங். 128:2). யோசேப்பு கர்த்தருக்குப் பயந்து நடந்தான் (ஆதி. 42:18). தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்று சொல்லி பாவத்துக்கு விலகி ஓடிப்போனான். தேவன் அவன் கையின் பிரயாசத்தை ஆசீர்வதித்தார். அவன் எதை செய்தானோ, அதைக் கர்த்தர் வாய்க்கப் பண்ணினார். (ஆதி. 39:3)

**ஆ–2:** கர்த்தருக்கு ஒரு மனுஷன் பயந்து நடக்கும்போது:– கர்த்தர் அவனை மாத்திரமல்ல. அவன் நிமித்தமாக, அந்த வீட்டையும் (குடும்பத்தையும்) ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் யோசேப்பினிமித்தம், அவன் தங்கியிருந்த எகிப்தியன் வீட்டையும் ஆசீர்வதித்தார் (ஆதி. 39:5).

**ஆ–3:** அடுத்ததாக, தேவன் அவருக்குப்பயப்படும் மனுஷனின் சந்ததியையும், அவன் தேசத்தையும் ஆசீர்வதிக்கிறார். (சங். 128:6). யோசேப்பினிமித்தம் தேவன் எகிப்து தேசத்தை ஆசீர்வதித்தார். பல தேசங்களிலே பஞ்சம் இருந்தாலும், எகிப்திலே ஆகாரம் இருந்தது. யோசேப்பின் மூலமாக, அவனுடைய குடும்பத்தார் காப்பாற்றப்பட்டார்கள்.

கர்த்தருக்குப் பயப்படும்போது, இன்னும் அநேக ஆசீர்வாதங்களை தேவன் தருகிறார். (சங். 34:7,9, சங். 103:11,13,17, நீதி. 10:27, நீதி. 14:26,27, நீதி. 19:23, நீதி. 29:25). ஆனாலும், என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்: அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்: நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப் போல வளருவீர்கள் (மல். 4:2)

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்**

சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி; அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்: -தானி. 6:22

# ஒளி (வசனம்) வீச்சு

## பாதுகாப்பு

என் கட்டளைகளின்படி செய்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு அவைகளின்படி நடக்கக்கடவீர்கள்: அப்பொழுது தேசத்திலே சுகமாய்க் குடியிருப்பீர்கள் (லேவி. 25:18).

பென்யமீனைக்குறித்து: கர்த்தருக்குப் பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்: அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி, அவன் எல்லைக்குள்ளே வாசமாயிருப்பார் என்றான் (உபா. 33:12).

இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும்: கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர் உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக என்றான் (2சாமு. 7:29).

தமஸ்குக்கடுத்த சீரியாவிலே தாணையங்களை வைத்தான்: சீரியர் தாவீதைச் சேவித்து, அவனுக்குக் கப்பங் கட்டினார்கள். தாவீது போன இடத்திலெல்லாம், கர்த்தர் அவனைக் காப்பாற்றினார் (2சாமு. 8:6).

நீ போன இடமெல்லாம் உன்னோடே இருந்து, உன் சத்துருக்களையெல்லாம் உனக்கு முன்பாக நிர்மூலமாக்கி, பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த நாமத்தை உனக்கு உண்டாக்கினேன் (1நாளா. 17:8).

ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்: உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பார். உமது கை உமது சத்துருக்களெல்லாரையும் எட்டிப்பிடிக்கும்: உமது வலதுகரம் உம்மைப் பகைக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும். உமது கோபத்தின் காலத்திலே அவர்களை அக்கினிச் சூளையாக்கிப் போடுவீர்: கர்த்தர் தமது கோபத்திலே அவர்களை அழிப்பார்: அக்கினி அவர்களைப் பட்சிக்கும் (சங். 21:7−9).

ராஜாவோ தேவனில் களிகூருவார்: அவர்பேரில் சத்தியம்பண்ணுகிறவர்கள் யாவரும் மேன்மைபாராட்டுவார்கள்: பொய் பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும் (சங். 63:11).

அங்கே தாவீதுக்காக ஒரு கொம்பை முளைக்கப்பண்ணுவேன்: நான் அபிஷேகம்பண்ணுவித்தவனுக்காக ஒரு விளக்கை ஆயத்தம்பண்ணினேன். அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவேன்: அவன்மீதிலோ அவன் கிரீடம் பூக்கும் என்றார் (சங். 132:17−18).

நீரே ராஜாக்களுக்கு ஜெயத்தைத் தந்து, உமதடியானாகிய தாவீதைப் பொல்லாத பட்டயத்திற்குத் தப்புவிக்கிறவர் (சங். 144:10).

**- அஹமதி தமிழ் திருச்சபை**

அவனுக்கு முன்பாக நிலைநிற்பவன் ஒருவனும் இல்லை: -தானி. 11:16



ஒரு ஊரில்

# உன்னால் முடியும்

ஒரு பள்ளியில் வாத்தியார் வகுப்பறைக்குள் நுழைந்தார். மேஜை மீதிருந்த கண்ணாடி டம்ளரை எடுத்து தூக்கி காட்டினார். இது எவ்வளவு எடை இருக்கும் என்று மாணவர்களை கேட்டார். 50 முதல் 100 கிராம்வரை இருக்கலாம் என்று மாணவர்களிடமிருந்து பதில் வந்தது.

இதோட சரியான எடை எனக்கும் தெரியாது. ஆனால் என்னோட கேள்வி அதுவல்ல என்று வாத்தியார் தொடர்ந்தார். இதை அப்படியே நான் கையில் பிடிச்சுகிட்டிருந்தேன்னா என்ன ஆகும்? ஒண்ணுமே ஆகாது சார் என்னறனர் மாணவர். வெரிகுட்: ஆனா ஒரு மணி நேரம் இப்படியே பிடிச்சிகிட்டிருந்தேன்னா...? உங்க கை வலிக்கும் சார். ஒரு நாள் இப்படியே வெச்சிருந்தேன்னா...! உங்க கை அப்படியே மரத்துடும் சார். வெரி வெரி குட். ஒரு மணி நேரத்துலே என் கை வலிக்கிறதுக்கும் ஒரு நாளிலே மரத்து போகிற அளவுக்கு மாறுறதுக்கும் இந்த டம்ளரோட வெயிட் கூடிகிட்டே போகுமா என்ன! இல்லை சார்: அது வந்து...

எனக்கு கை வலிக்காம மரத்துடாம இருக்கணும்ணா நான் என்ன பண்ணணும்? கிளாஸை உடனே கீழே வெச்சுடணும் சார். எக்ஸாக்ட்லி. இந்த டம்ளர் தான் பிரச்சனை. ஒரு பிரச்சினை நமக்கு வந்ததுன்னா அதை அப்படியே மண்டைக்கு ஏத்தி ஒரு மணி நேரம் வெச்சிருந்தோம்னா வலிக்க ஆரம்பிக்கும். ஒரு நாள் முழுக்க அப்படியே வெச்சிருந்தா மூளை செயலிழந்து மரத்துவிடும். மேலும் அதிக நேரம் வெச்சிருந்தா இதயமும் பாதிக்கப்படலாமே! அதனாலே உங்களுக்கு ஏதாவது பிரச்சனை வந்துடிச்சின்னா தூக்கி ஒரு ஓரமா கடாசிடுங்க. அதுவே சரியாயிடும். வச்சுகிட்டே இருக்காதீங்க. ஓ.கே!

இயேசுவும் நமக்கு ஏற்கெனவே சொல்லித் தந்திருக்கிறாரே. **"கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?"** (மத். 6:27) என்று. நாமதான் எதையும் ஃபாலோ-அப் (கடைபிடிப்பது) பண்ணுரதில்லையே! அதனால் தான் பரி. பவுலும் பிலிப்பியருக்கும் எழுதும் கடிதத்தில் எழுதியிருக்கிறார், **"கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்: சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்"** (பிலி. 4:4). இனிமேலாவது பிரச்சனைகளை தூக்கிப் போட்டுட்டு கர்த்தருக்குள் சந்தோஷமா இருக்கலாமே!.

**கர்த்தரின் கிருபையில்**
**லிடியா ஆ. தாஸ்**

## சிரி.... சிந்தி

**ஒரு நொடி துணிந்தால் இறந்துவிடலாம். ஒவ்வொரு நொடியும் துணிந்தால் நாம் ஜெயித்துவிடலாம்.**

**- அஹமதி தமிழ் திருச்சபை**

## ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

**செயலாளர்**
சகோ. ஸ்டாலின்
66021072

**பொருளாளர்**
சகோ. விசு
97686317

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அற்புதராஜ்
60692485



Bro. சுனில் ஸ்டாலின் & Sis. சௌமியா
தம்பதியரின் குழந்தை பிரதிஸ்டை

**சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்**

**-------(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait**

ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்

**Church website: www.ahmaditamilcongregation.org**
**Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com**

**சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048**

**Private Circulation only**